[1973 ஆகஸ்ட் 14

பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் அம்மை குத்துபவர்கள்.

* 130 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1—3—1963-ல் ஆரம்பமாகிய தேசிய பெரியம்மை ஒழிப்புத் திட்டத்தில் பணிபுரியும் அம்மை வைப்பவர்களின் எண்ணிக்கை மொத்தம் எவ்வளவு?

(இ) இதுநாள்வரை அவர்களின் வேலை நிரந்தரமாக்கப்படவில்லை என்பது உண்மையா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) விவர அறிக்கை ஒன்று @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த பெரியம்மை தடுப்புத் திட்டம் மத்திய அரசின் திட்டமாகும். இதே போன்று முன்பு மலேரியா ஒழிப்புத் திட்டம் இருந்ததை மத்திய அரசு நிரந்தரமாக்கியுள்ளது. ஆகவே, நம்முடைய மாநில அரசு இந்த பெரியம்மை தடுப்பு திட்டத்தையும் நிரந்தரமாக்கி, அங்கே பணிசெய்பவர்களின் வேலையையும் நிரந்தரமாக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மத்திய அரசு அதை ஒவ்வொரு ஆண்டாகத்தான் ஏற்படுத்திக்கொடுக்கிறது. அப்படிக் கொடுக்கிற காரணத்தால் இடைமுறிவு ஏற்படுகிறது. ஆகவே, அவர்கள் பணியில் ஒவ்வொரு ஆண்டும் புதிதாக சேர்க்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. தமிழ்நாடு அரசு இப்படி இடைமுறிவு இல்லாமல் இருப்பதற்கும், அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஊதிய உயர்வு பெறுவதற்கும், சில விதிமுறைகளைத் தளர்த்தவேண்டுமென்று, நிர்வாகத் துறையையும், நிதித் துறையையும், நலத் துறை கேட்டுக்கொண்டிருக்கிறது. அதன் மூலமாக அவர்கள் இப்போது தற்காலிகமாக ஆற்றும் பணி ஓரளவு நிரந்தரம் செய்யப்படுவதற்கும் வழி செய்யும். அந்த வகையில் அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, விவர அறிக்கையில் குடும்ப நல இயக்குநர் நிரந்தரமாக்கவேண்டுமென்று கருதுவாரானால், அவர்களை நிரந்தரமாக்கலாம் என்று கருத்து கூறியிருக்கிறார்கள். ஆகவே, அந்த இயக்குநரிடத்தில் தொடர்புகொண்டு அவர்களின் பணியை நிரந்தரமாக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்தக் கருத்தை அவ்வாறு எடுத்துக்கொண்டது அவ்வளவு சரியானதாக எனக்குத் தோன்றவில்லை. குடும்ப நலத் துறை, நல்வாழ்வுத் துறை இயக்குநர், அவர்களுடைய பணி இடைமுறிவு ஆகிவிடுகிற அந்தப் பணிக்காலத்தை 'கன்டோன்'

@ 388–389-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

1973 ஆகஸ்ட் 14]

செய்யவேண்டுமென்று பரிந்துரையாகத்தான் நிதித்துறை காட்டியிருக்கிறார்கள். இடைமுறிவு ஏற்பட்டுவிட்டால் அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கத் தடையாகிறது. ஆகவே, விதிவிலக்கு அளித்து, அதற்குப் பிறகு நிரந்தரம் செய்யவேண்டுமென்று இருக்கிறது. இப்போது இருக்கும் விதிமுறையைத் தளர்த்தி, பணி உறுதி செய்யவேண்டுமென்பதற்குத் தான் இப்போது பொது (சர்வீஸ்) இலாகா, நிதி இலாகா ஆகியவற்றின் ஆலோசனை கேட்கப்படுகிறது.

மருத்துவ மனைகளில் சேர்க்கப்பட்ட மன நோயாளிகள்.

*131 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா— முற்ப 9-3

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் மன நோயினால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், ஆண்டு வாரியாக?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒரு விவரப்பட்டியல் @ அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திருப்பூர் நகருக்கு வடிகால் திட்டம்.

*132 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், வினா எண். 82-க்கு 8-12-72 அன்று பேரவையில் அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சி மன்றம் வடிகால் திட்டத்திற்காக ரூபாய் 50,000 குடிநீர் வாரியத்திற்குச் செலுத்தியுள்ளதா?

(இ) ஆம் எனில், மேற்படி வேலைகள் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) ஆம். ஆய்வு வேலைக்கான செலவுத் தொகையைப் பின்வருமாறு திருப்பூர் நகரசபை செலுத்தியிருக்கிறது.

7-9-72-ல் ரூ. 10,000

31-1-73-ல் ரூ. 40,000

(இ) ஆய்வுப் பணி 12-2-72-ல் மேற்கொள்ளப்பட்டது. டிசம்பர் 73-ல் அந்தப் பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

@ 389-ம் பக்கத்தில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.